திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே கடந்த ஒரு வார காலமாக மின்சாரம் இல்லை என்ற பிரச்சினை அமைச்சருக்கும் தெரியும், அவைக்கும் தெரியும். அதைப் போக்குவதற்காக இங்கே விவாதிக்க விவசாயிகள் பெரும் அளவில் பாதிக்கப்பட்டு பொருளாதாரத்தில் சீரழிவு ஏற்படுகின்ற நிலையைப்பற்றி விவாதிக்க முடிவு எடுக்காமல் நாளை என்று ஒத்திவைப்பது சரியா என்ற கேள்வியை நாங்களும் எழுப்பி நாங்களும் வெளிநடப்புச் செய்கிறோம்.

(திரு. இல. பலராமனும் மற்றும் சிலரும் வெளிநடப்புச் செய்தனர்).

(முற்பகல் 10.30).

திரு. அ. ரகுமான்கான் : நான் உரிமைப் பிரச்சினை கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; பரிசீலனையில் இருக்கிறது,

(2) ஒழுங்குப் பிரச்சினை—தொடர்ச்சி.

(ஆ) அரசினர் கொள்கை பற்றிய முடிவை பேரவையில் அறிவிக்காது முதலில் மேலவையில் அறிவித்தது.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த அவையினுடைய கவுரவத்தை நீங்கள் பாதுகாக்க வேண்டியவர்களாக இருக்கிறீர்கள். எனவே, அதுபற்றிய பாயின்ட் ஆப் ஆர்டர் அரசாங்கம் எந்த முடிவை எடுத்தாலும், இந்த அவையிலே அந்த முடிவுகளைச் சொல்வதற்கு வாய்ப்பு இருக்குமானால், இங்கே கட்டாயமாக அதைச் சொல்லிவிட்ட பிறகு, வேறு எங்காவது சொல்ல வேண்டும். ஆனால், சமீபத்தில் மின்சார பட்ஜெட் மீது இங்கே விவாதம் நடத்திருக்கிறது. அரசாங்கத்தின் முக்கியமான கொள்கை, அதாவது 5 வருஷ காலத்திற்கு எலக்ட்ரிசிட்டி போர்டிலே இருக்கக்கூடிய என்ஜீனியர்கள் செல்ப் எம்ப்ளாய்மென்ட் அதாவது சுய வேலை தேடிகொள்ளும் முயற்சியில் ஈடுபட்டால், அவர்களுக்கு 5 ஆண்டுகள் லீவ் கொடுப்பது என்றும், அதேபோல் ஒரு குறிப்பிட்ட ஓர்க்க சில் ஒரு பகுதியினருக்குமட்டும், பென்ஷன் கொடுப்ப என்றிருக்கிறது. இதை எல்லோருக்கும் எக்ஸ் டன்ட் பண்ணவேண்டும் என்பதுபோன்ற முக்கியமான பிரச்னைகளை, இங்கே மின்சார பட்ஜெட்மீது விவாதம் நடக்கும்போது சொல்லாமல், மேலவையிலே சொல்லபட்டிருக்கிறது. இது இன்றைக்கு இந்த அவையின் கவுரவத்தைக் குறைப்

பதாக இருக்கிறது. Ours is directly elected House. இங்கேதான் முதலிலே அரசாங்கத்தின் முடிவைச் சொல்லவேண்டும்; அப்படிச் சொல்லாமல், அங்கே சொல்லியிருப்பது It is an absolute contempt of the House நீங்கள் இந்த அவையைப் பாதுகாக்காமல் யார் பாதுகாப்பது கட்டாயமாக கவர்மென்ட் இதைப்பற்றி விளக்கம் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இதைப்பற்றி அன்றைக்கே எழுப்பியிருக்கவேண்டும். இப்போது காலங் கடந்து எழுப்பியிருக்கிறீர்கள் எனது கவனத்திற்கு இது முன்னாலேயே வரவில்லை.

திரு. ரா. உமாநாத் : நான் கல்கத்தாவிற்கு சென்ரட்ல் கமிட்டி கூட்டத்திற்குச் சென்றிருந்தேன். அப்போது அங்கே இதைப் பத்திரிகையிலே பார்த்து வியப்படைந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: யாருமே இதை என்னுடைய கவனத்திற்கு இதுவரை கொண்டு வரவில்லை இன்றைக்கு நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள்.

திரு. ரா. உமாநாத் : அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி விளக்கட்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, உண்மை நிலை தெரிந்திருக்குமானால் மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் இப்பிரச்சினையை எழுப்பியிருக்க மாட்டார்கள். சட்டப்பேரவையில் மின் வாரிய நிதிநிலை அறிக்கையைப் பற்றி விவாதிக்கபட்டது. ஆனால் அன்றோடு சட்டசபை கூட்டத்தொடர் முடிந்துவிட்டது. அதற்கு பிறகுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து இந்த கருத்தினைப்பற்றி நான் பேச முடிந்தது. அவர்கள் அதிலே, சில திருத்தங்களை சொல்லி அதை எப்படி அறிவிக்க வேண்டுமோ அப்படி அறிவிக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அதற்கு பிறகு நடந்தது மேலவை தான், ஆகவேதான் மேலவையிலே அறிவிக்கப்பட்டது. ஆகையினால் சட்டசபையை அவமதிக்க வேண்டுமென்றோ அல்லது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அந்தத் தகவலை முதலிலே அளிக் மறுக்கவேண்டுமென்றோ நிலை இல்லை என்பததைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே இது மிகவும சீரியசான பிரசினை, ஒரு நான் விவாதம் நடந்திருக்கிறது. அப்போது அதைச்......சொல்லவில்லை.

1982 மார்ச் 31]

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, நான் கூட இதைக் குறித்து பேசினேன். அந்த விஷயத்தில் ஒரு வார்த்தை கூட அவர் பதில் சொல்லவில்லை. அதற்கு பதிலாக பொருளாதார நிலை பற்றி மட்டும் பேசி, தொழிலாளர்களைப் பற்றி நான் பேசினேன் என்று சொன்னதற்கு கூட பதில் அளிக்காமல் இருந்துவிட்டார். நான் சொல்லியிருக்கிறேன் என்பதால் இங்கே எங்களுக்காவது தெரிவிக்கும்படியாக அவர்கள் சொல்லியிருக்க வேண்டும். அதுவும் சொல்லாமல், அதுபற்றி விஷயத்தை இந்த அவைக்கு தெரிவிக்காமல் செய்திருப்பது எப்படி நியாயம் என்பதை நீங்கள் பார்க்கவேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மறு நாள் பேரவை கூடவில்லை.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே இதுபோன்ற சந்தர்ப்பங்களில் எத்தனையோ முறை மாண்புமிகு அமைச்சர்கள் முதலமைச்சரை காண்டக்ட் பண்ணி, எங்கேயிருந்தாலும் தொடர்பு கொண்டு இதேபோன்ற விஷயத்தை 'அக்செப்ட்' பண்ணலாமா, வேண்டாமா என்று அன்றே அனவுன்ஸ்' செய்வதுண்டு. 'லாஸ்ட் டே' என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள், லாஸ்ட் டே என்பதால் அதன் அர்ஜென்சியை' உணர்ந்து பிறகு சொல்ல முடியாதே என்பதால் முதலமைச்சர் அவர்களை காண்டாக்ட் பண்ணியிருக்கலாமே, என்பதைத் தான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் தவறான எண்ணம் கொள்வதற்கு எதுவும் இல்லை. மேலவை உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் ஆனது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் அங்கே வருகிறார்கள். யார் உயர்ந்தவர்கள், யார் குறைந்தவர்கள் என்ற எண்ணத்திலே நாங்கள் பார்ப்பதில்லை. நீங்களும் பார்க்கமாட்டீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். உங்களுடைய தொகுதியின் சூழ்நிலைகளை நீங்கள் எந்தளவிற்குச் சொல்கிறீர்களோ, அதை உணர்ந்து எந்த நிலைமையால் இவ்வாறு ஏற்படுகிறது என்பதை புரிந்து நாங்கள் உடனடியாக தெரிவிக்க முடியாமல் அதிகாரிகளோடு விவாதிக்க வேண்டியிருக்கிறது. தகுந்த முடிவுகளை பிறகு வெளியிடுகிற கட்டாயம் நேர்கின்றது. ஆகவேதான் அதை மேலவையில் வெளியிட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பேரவை இல்லாத காரணத்தால் எங்கே சொல்ல வேண்டுமோ அங்கே சொன்னோம். உறுப்பினர்களுடைய உரிமைக்கு தகுதியில்லாத நிலைமையை நாங்கள் உருவாக்கிவிட்டோமோ என்று யாரும் சந்தேகப்படக்கூடிய நிலைமை இங்கே இல்லை. அதே போல ஆளுநர் உரைக்கு பதில் சொல்கிற போது இங்கே

பேசியதை விட மேலவையில் அதிக நேரம் பேசினேன் என்றால் அதற்கு இந்த அவையை அலட்சியப்படுத்திவிட்டேன் என்ற பொருள் இல்லை. இதில் சிலருக்குக் கோபம் வருகிறது. ஏழு மணிநேரத்தை நான் வீணாக்கி விட்டேன் என்று சொல்கிறவர்களும் இருக்கிறார்கள். அதையெல்லாம் நாங்கள் தாங்கிக்கொள்கிறோம். நட்பின் மிகுதியால் வருகிறவை என்று அளவிலே எடுத்துக்கொள்கிறோம்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, எங்களுடைய உணர்வுகள் எப்படி இருக்கிறது என்று சொன்னால் இங்கே நடந்த விவாதத்தில் நாங்கள் சொன்னதற்கு எந்தப் பதிலும் சொல்லாமல், குறிப்பாக நான் பென்ஷன் மற்றும் தொழிலாளர் விஷயம் குறித்து இங்கே பேசினேன். இங்கே பதில் சொல்லவில்லை என்றால் எங்களைத் தவிர்க்கிறாரோ என்ற எண்ணம் எங்களுக்கு ஏற்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை அன்று நடக்கவில்லை என்பதைத் தான் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகையால் இதில் பிரச்னை ஒன்றும் இல்லை.

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

குமரி மாவட்டம் மண்டைக்காடு இராமத்தில் துப்பாக்கிச் சூடு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் டி. மணி, ஜே. ஹேமச்சந்திரன், கே. ஆர். சுந்தரம், பெ. சு. திருவேங்கடம், மு. அம்பிகாபதி, ஈ. எஸ். எம். பக்கீர் முகம்மது, ப. பொன்னுரங்கம், எஸ். இரத்தினராஜ், கே. எம். தங்கமணி, சி. பழனிமுத்து, எல். இளையபெருமாள், ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன், எஸ். என். ராமசாமி, திரு. ஈ. முத்துராமலிங்கம், பொ. விஜயராகவன், நா. சுந்தரராஜ், அ. ரகுமான்கான், ஏ. சாகுல் ஹமீது, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், சோ. அழகர்சாமி, எம். ஆறுமுகம், ஏ. டி. கருப்பையா, என். ஏ. பூங்காவனம், என். எஸ். வி. சித்தன் ஆகியோர் "குமரி மாவட்டம், குளச்சல் அருகே மண்டைக்காடு என்ற